
## 4 ஆய்வுப்பொருள்: ஒன்று:-
## உலகில் வெளிப்படும் இறைச் செயற்பாடு

### 1.4. இறைவன் நாமே

மனித வரலாற்றில் இறைவன் சிறப்பான முறையில் தம்மை வெளிப்படுத்தியுள்ளார். தமது சாயலாகவும் பாவனையாகவும் மனிதனைப் படைத்த இறைவன் மனித வரலாற்றில் தம்மை அதிகமாக வெளிப்படுத்துவது இயல்பே.

முதல் பெற்றோர் பாவம் செய்ததால் மாந்தர் அனைவரையும் மீட்கத் திட்டமிட்ட இறைவன் அதற்கென ஓர் இனத்தை ஆயத்தப்படுத்துகிறார். அம் மக்கள் வாழ்க்கையில் நெருங்கிய உறவு கொள்கிறார். குலமுதுவர்கள், நடுவர்கள், அரசர்கள், இறைவாக்கினர்கள் வழியாக தம்மைப் படிப்படியாக வெளிப்படுத்துகிறார். தாமே உயிருள்ள கடவுள் என்றும், உண்மைக் கடவுள் என்றும், பராமரிக்கும் தந்தை என்றும், நீதி நிறை நடுவர் என்றும் வெளிப்படுத்துகிறார்.





- நீர் இவை பற்றி முன்பு அறிந்திருந்தாலும் திருவிவிலியத்தில் இவற்றைத் தேடிப்பார்க்கவும்.

மோசேக்குத் தன் பெயரை வெளிப்படுத்திய இறைவன் தாம் ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் என, அதாவது ‘யாவே' (Yahweh) இறைவன் என வெளிப்படுத்தினார்.


இலவச விநியோகத்திற்காக

இறை - மனித தொடர்பின் ஆழமான உறவிற்கு இவற்றின் மூலம் அழைக்கப்படுகின்றோம். இறைவன் தன்னை வெளிப்படுத்தும்போது நாம் அவரை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்க வேண்டும். எமது விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும். இறைவெளிப்பாட்டு உறுதியானது எமது விசுவாச வளர்ச்சியினூடாகவே வெளிப்பட வேண்டும். உயிருள்ள இறைவனுக்கும் மனிதனுக்குமிடையேயுள்ள உள்ளார்ந்த உறவானது இறை வெளிப்பாட்டு வரலாற்றில் பலவகைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**இறை வெளிப்பாட்டை திருவிவிலியம் மூலம் ஆராய்வோம்.**




**பழைய ஏற்பாடு**

**தீய்ந்து போகாத முட்செடி**

மோசே கடவுளிடம், ''இதோ! இஸ்ரயேல் மக்களிடம் சென்று உங்கள் மூதாதையரின் கடவுள் என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார் என்று நான் சொல்ல, 'அவர் பெயர் என்ன?' என்று அவர்கள் என்னை வினவினால், அவர்களுக்கு என்ன சொல்வேன்?'' என்று கேட்டார், கடவுள் மோசேயை நோக்கி, 'இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே' என்றார். மேலும் அவர், ''நீ இஸ்ரயேல் மக்களிடம், 'இருக்கின்றவர் நானே' என்பவர் என்னை உங்களிடம் அனுப்பினார் என்று சொல்'' என்றார். கடவுள் மீண்டும் மோசேயை நோக்கிப் பின்வருமாறு கூறினார் ''நீ இஸ்ரயேல் மக்களிடம், 'உங்கள், - மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர் - ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள்- என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார்' என்று சொல், இதுவே என்றென்றும் என் பெயர் தலைமுறை தலைமுறையாக என் நினைவுச் சின்னமும் இதுவே!

(வி.ப. 3:13-15)



இலவச விநியோகத்திற்காக

## சீனாய் உடன்படிக்கை

நீங்கள் என் வார்த்தைக்குச் செவிசாய்த்து என் உடன்படிக்கையைக் கடைப்பிடித்தால் அனைத்துலகும் என் உடைமையேயெனினும், நீங்களே எல்லா மக்கள் இனங்களிலும் என் தனிச் சொத்தாவீர்கள். மேலும், எனக்கு நீங்கள் குருத்துவ அரசாகவும், தூய மக்களினமாகவும் இருப்பீர்கள். இவ்வார்த்தைகளே நீ இஸ்ரயேல் மக்களிடம் கூற வேண்டியவை' என்றார்.

(வி.ப. 19:5-6)

## புதிய ஏற்பாடு

## இயேசுவின் திருமுழுக்கு

மக்களெல்லாரும் திருமுழுக்குப் பெறும் வேளையில் இயேசுவும் திருமுழுக்குப் பெற்று, இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தபோது வானம் திறந்தது. தூய ஆவி புறா வடிவில் தோன்றி அவர்மீது இறங்கியது. அப்பொழுது, 'என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்' என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.

(லூக். 3:21-22)

## இயேசு தோற்றம் மாறுதல்

அந்த மேகத்தினின்று, 'இவரே என் மைந்தர் நான் தேர்ந்துகொண்டவர் இவரே. இவருக்குச் செவிசாயுங்கள்' என்று ஒரு குரல் ஒலித்தது.

(லூக். 9:35)



இலவச விநியோகத்திற்காக

இறைவன் இஸ்ரயேல் மக்களைத் தாம்தேர்ந்தெடுத்த மக்களென்றும், அவர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டார் என்பதும் வரலாற்றில் முக்கியமான இறைவெளிப்பாடாகக் காணக் கூடியதாயுள்ளது. இவ்வுடன்படிக்கையின் வழியாக அவர்களுக்குத் தம்மை முழுமையாக வெளிப்படுத்தியதோடு இஸ்ரயேல் மக்களும் அவரை ஏற்றுக் கொண்டு முழு உலகிற்கும் சாட்சிபகரவும், உடன்படிக்கை செய்தனர். இந்த உடன்படிக்கைப் பிணைப்பின் வழியாக தமது திட்டத்தை மக்களுக்கு வெளிப்படுத்துவதோடு அவர்களுடைய நல்வாழ்வுக்கான சட்ட நெறிகளைத் தயாரித்துக் கொடுத்தார்.

இறைவாக்கினரும் இறைவெளிப்பாட்டு வரலாற்றில் இன்னுமொரு முக்கிய பணியினை நிறைவேற்றியதோடு அவர்கள் இறை வார்த்தையைக் காலாகாலமாகப் பாதுகாத்து பல்வேறு கஷ்டங்கள் இன்னல்கள் மத்தியிலும் மக்களுக்குத் தெளிவாக விளக்கினர், இறைவனுடைய கட்டளைகளைப் பாதுகாத்து உடன்படிக்கை வாழ்வுக்கும் வழி காட்டினர். இறைவார்த்தையின் வல்லமையினால். மரணத்திலிருந்து மீட்டல், படைகளை விரட்டியடித்தல் போன்ற செயல்களை நிறைவேற்றியதோடு மீட்பின் திட்டத்தையும் வெளிப்படுத்தினர்.

பழைய ஏற்பாட்டில் இறைவன் தம்மை தெளிவாக அறிமுகப்படுத்துவதோடு நாமும் அவரை அறிந்து கொள்ளவேண்டுமென்ற தமது விருப்பத்தையும் வெளிப்படுத்தியுள்ளார். அதன் வழியாக நாம் இறை பிள்ளைகளாக அவருக்கே உரியவர்களாகவும் அவரது சொத்தாகவும் வாழ வேண்டிய வழியை அறிந்து கொள்வோம்.

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட இறைவெளிப்பாட்டை நோக்கும் போது அவருடைய முழுமைத் தன்மையை இவ்வாறு முன்வைத்துள்ளார்.

என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும். (யோவா. 14:9)
நல்ல ஆயன் நானே. (யோவா. 10:14)
வழியும் உண்மையும் வாழ்வும் நானே. (யோவா. 14:6)

மீட்பின் வரலாற்றினூடாகவும் கிறிஸ்துவினூடாகவும் தன்னை வெளிப்படுத்தி மனிதராகிய எமது விசுவாசத்தை உறுதிப்படுத்துகிறார். இதனூடாக எம்மைத் தம்மோடு வாழ அழைக்கின்றார்.


இலவச விநியோகத்திற்காக

இறைவெளிப்பாடு நிகழ்வில் நாம் கிறிஸ்துவினூடாக இறைவனை அறிந்துகொள்ளவும் அவர் வழியாக இறைவனைச் சந்திக்கவும் இறைசாயலை பகிர்ந்து கொள்ளவும் ஆழமான இறை உறவிற்கு எம்மை அழைப்பதை விளங்கிக் கொள்வோம். இன்றைய நாளில் எனது அயலவனில் தம்மை வெளிப்படுத்துகிறார். அத்தோடு பலவித சம்பவங்கள் (நன்மையான, தீமையான) ஊடாகவும் தம்மை வெளிப்படுத்துகிறார்.

**இறைவெளிப்பாட்டிற்கு எனது பதில்:**

- எமக்கு வெளிப்படும் இறைவனுக்குப் பக்தியுடனும் பிரமாணிக்கத்துடனும் பதில் அளிப்போம்.
- எமது அறிவு, சிந்தனை, முழுச் சுதந்திரத்துடன் அவருக்குக் கீழ்ப்படிவோம்.
- அவருக்கு முழு விருப்புடன் செவிசாய்ப்போம்.
- இறைவார்த்தைக்குச் செவிமடுத்து விசுவாசத்துடனும் அர்ப்பணத்தோடும் செயற்படுவோம்.
- இறைவெளிப்பாட்டிற்கு விசுவாசத்தோடு பதில் அளித்து மீட்பின் வழியைப் பின்பற்றுவோம்,
- பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் எமது செயல்களை ஆற்றி கிறிஸ்துவுக்குச் சாட்சியாவோம்.

**இறைவெளிப்பாட்டில் வெளிப்படும் உயிருள்ள அன்பு**

**இந்த இறையன்பின் வழியாக**
**எமது விசுவாச வாழ்வை**
**உறுதிப்படுத்துவோம்.**

**இதை உம்மால் செய்ய முடியுமா?**

- இறை வெளிப்பாடு நடந்த முறையை கீழ்க்காண்பவற்றுக்கூடாகத் தகவல் திரட்டுக.

1. தெரிந்தெடுக்கப்பட்ட மக்களின் வாழ்வின் ஊடாக வெளிப்பாடு.
2. இறைவாக்கினர் ஊடாக வெளிப்பாடு.
3. மூவொரு இறைவனின் வெளிப்பாடு.



இலவச விநியோகத்திற்காக

**உமது வாழ்க்கைக்கு...**

- ❐ இறைவன் வெளிப்படுத்தும் செய்தியைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள்.
- ❐ உமது வாழ்வினூடாக கிறிஸ்துவை வெளிப்படுத்துங்கள்.

**"இறைவெளிப்பாட்டையும் விசுவாசத்தையும் பிரிக்க முடியாது."**

**சிந்தனைக்கு:**

பலமுறை, பலவகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள், இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார், இவரை எல்லாவற்றுக்கும் உரிமையாளராக்கினார், இவர் வழியாக உலகங்களைப் படைத்தார்,

(எபிரேயர் 1:1-2)



இலவச விநியோகத்திற்காக